www.Padasalai.Net

www.CBSEtips.in

12[th] STD

**முன் மாதிரி இரண்டாம் இடைப் பருவத் தேர்வு - 2023**

**கணக்குப்பதிவியல்**

நேரம் : 1.30 மணி மதிப்பெண் : 50

## பகுதி ---- I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்** 10 × 1 = 10

1. நிறுமக் கலைப்பின் போது மட்டுமே அழைக்கப்படக் கூடிய பங்கு முதலின் ஒரு பகுதி இவ்வாறு அழைக்கப்படும்.
   அ) அங்கீகரிக்கப்பட்ட முதல் ஆ) அழைக்கப்பட்ட முதல்
   இ) முதலினக் காப்பு ஈ) காப்பு முதல்

2. முகமதிப்பைவிட அதிகமாக பெற்ற தொகை வரவு வைக்கப்படும் கணக்கு
   அ) பத்திர முனைமக் கணக்கு ஆ) அழைப்பு முன்பணக் கணக்கு
   இ) பங்குமுதல் கணக்கு ஈ) பங்கு ஒறுப்பிழப்புக் கணக்கு

3. நிறுமம் ₹. 10 மதிப்புள்ள 50,000 நேர்மைப் பங்குகளை பங்கொன்று ₹. 3 வீதம் முனைமத்தில் வெளியிட்டது. முனைமத்தொகை ----------------
   அ) ₹. 1,00,000 ஆ) ₹. 50,000 இ) ₹. 1,50,000 ஈ) ₹. 2,00,000

4. சொத்துகளை வாங்கி பங்குகள் வெளியிடும்போது வரவு வைக்கப்படும் கணக்கு
   அ) விற்பனையாளர் க/கு ஆ) பற்பல சொத்துகள் க/கு
   இ) பங்குமுதல் க/கு ஈ) வங்கி க/கு

5. ₹. 7 செலுத்தப்பட்ட, ₹. 10 மதிப்புள்ள பங்கு ஒறுப்பிழப்பு செய்யப்பட்டது எனில், அதன் குறைந்த அளவு மறுவெளியீட்டு விலை ------------
   அ) பங்கொன்று ₹. 10 ஆ) பங்கொன்று ₹. 7 இ) பங்கொன்று ₹. 3 (ஈ) பங்கொன்று ₹. 2

6. நிதிநிலை அறிக்கைகள் வெளிக்காட்டாதது
   அ) பணம்சாரா தகவல்கள் ஆ) கடந்தகால தகவல்கள்
   இ) குறுகியகால தகவல்கள் ஈ) நீண்டகால தகவல்கள்

7. நிதி என்னும் சொல் குறிப்பிடுவது
   அ) நடப்புப் பொறுப்புகள் ஆ) நடைமுறை முதல்
   இ) நிலைச் சொத்துகள் ஈ) நீண்டகாலச் சொத்துகள்

8. ஒரு பொது அளவு இருப்புநிலைக் குறிப்பில், நீண்டகாலச் சொத்துகளின் சதவீதம் 65 எனில், நடப்புச் சொத்துகளின் சதவீதம் எவ்வளவு?
   அ) 65 ஆ) 125 இ) 35 ஈ) 40

9. ஒரு வரையறு நிறுமத்தின் விற்பனை ₹. 20,000 லிருந்து ₹. 30,000 க்கு அதிகரித்துள்ளது. இது ஒப்பீட்டு வருமான அறிக்கையில் எவ்வாறு தோன்றுகிறது?
   அ) + 10 % ஆ) + 50 % இ) - 50 % ஈ) - 10 %

10. ஒரு வணிகத்தின் முதலாம் ஆண்டுச் செலவுகள் ₹. 80,000. இரண்டாம் ஆண்டில் செலவுகள் ₹.88,000 ஆக அதிகரித்திருந்தது. இரண்டாம் ஆண்டின் போக்கு விகிதம் என்ன?
    அ) 10 % ஆ) 110 % இ) 90 % ஈ) 11%



## பகுதி - II

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும் அவற்றில் வினா எண் 16 - க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** 4 × 2 = 8

11. மிகை ஒப்பம் என்றால் என்ன?
12. பத்திர முனைமக் கணக்கு பற்றி சிறுகுறிப்பு வரையவும்
13. நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வின் கருவிகளை பட்டியலிடவும்
14. நடைமுறை முதல் என்றால் என்ன?
15. கமல் நிறுமம் பங்கொன்று ₹. 10 வீதம் 5,000 நேர்மைப் பங்குகளை விண்ணப்பத்தின் போது முழுத்தொகையும் செலுத்தும் வகையில் வெளியிட்டது. பங்கொன்று ₹. 2 முனைமத்தில் வெளியிட்டால் குறிப்பேட்டுப் பதிவுகள் எவ்வாறு அமையும்?
16. அருள் நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து ஒப்பீட்டு வருமான அறிக்கையைத் தயாரிக்கவும்.

| விவரம் | 2015 - 2016 (₹) | 2016 - 2017 (₹) |
|---|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 50,000 | 60,000 |
| இதர வருமானம் | 10,000 | 30,000 |
| செலவுகள் | 40,000 | 50,000 |

## பகுதி - III

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 22 - க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** 4 × 3 = 12

17. முன்னுரிமைப் பங்குகளுக்கும், நேர்மைப் பங்குகளுக்கும் உள்ள வேறுபாடுகளை கூறவும்
18. ரொக்கம் தவிர இதர மறுபயனுக்கு பங்கு வெளியீடு என்றால் என்ன?
19. ரொக்க ஓட்ட பகுப்பாய்வு குறித்து சிறு குறிப்பு வரையவும்
20. டேனியல் நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து ஒப்பீட்டு வருமான அறிக்கையைத் தயாரிக்க

| விவரம் | 2015 - 2016 (₹) | 2016 - 2017 (₹) |
|---|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 40,000 | 50,000 |
| இயக்கச் செலவுகள் | 25,000 | 27,500 |
| வருமான வரி % ( வரிக்கு முன்னர் உள்ள இலாபத்தில் ) | 30% | 30% |

21. வானவில் மின்பொருள் வரையறு நிறுமம் ₹. 10 மதிப்பில் வெளியிட்ட 1000 நேர்மைப் பங்குகளை அர்ஜீன் தம்வசம் வைத்திருந்தார். அவர் விண்ணப்பத்தின் மீது ₹. 3, ஒதுக்கீட்டின் மீது ₹. 4 செலுத்தி விட்டார். ஆனால், முதல் மற்றும் இறுதி அழைப்பின் மீதான ₹. 3 அவரால் செலுத்த முடியவில்லை.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

அழைப்பு தொகை செலுத்தாத காரணத்தினால் இயக்குனர்கள், அப்பங்குகளை ஒறுப்பிழப்பு செய்தனர். ஒறுப்பிழப்பிற்கான குறிப்பிட்டுப் பதிவுகளைத் தரவும்.

22. மீனா நிறுமத்தின் 2018, மார்ச் 31 ஆம் நாளைய பொது அளவு இருப்புநிலைக்குறிப்பு தயாரிக்கவும்

| விவரம் | 2018, மார்ச் 31 |
|---|---|
| | ₹. |
| 1) பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள் | |
| பங்குதாரர் நிதி | 2,00,000 |
| நீண்டகாலப் பொறுப்புகள் | 1,60,000 |
| நடப்பு பொறுப்புகள் | 40,000 |
| **மொத்தம்** | **4,00,000** |
| 2) சொத்துகள் | |
| நீண்டகாலச் சொத்துகள் | 3,00,000 |
| நடப்புச் சொத்துகள் | 1,00,000 |
| **மொத்தம்** | **4,00,000** |

## பகுதி – IV

**ஏதேனும் நான்கு வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 4 × 5 = 20

23. புராகிரஸ் வரையறு நிறுமம் 50,000 சாதாரணப் பங்குகளை, பங்குகொன்று ₹. 10 வீதம் வெளியிட்டது. விண்ணப்பத்தின் போது ₹. 2, ஒதுக்கீட்டின் போது ₹. 4 முதலாவது அழைப்பின் போது ₹. 2 மற்றும் இரண்டாவது அழைப்பின் போது ₹. 2 செலுத்தப்பட்ட வேண்டும். அனைத்து பங்குகளும் ஒப்பப்பட்டன மற்றும் அனைத்து தொகைகளும் முறையாக பெறப்பட்டன. குறிப்பேட்டுப் பதிவுகள் தரவும்.

24. பாரடைஸ் வரையறு நிறுமம் ₹. 4,40,000 மதிப்புள்ள சொத்துகளை சுகுணா அறைகலன் வரையறு நிறுவனத்திடமிருந்து வாங்கியது. இதற்குப் பதிலாக ₹. 10 மதிப்புள்ள முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகளை செலுத்தி நிறைவு செய்தனர். பின்வரும் சூழலுக்கான பதிவுகளைத் தரவும்.
அ) பங்குகளை முகமதிப்பில் வெளியிட்டால்
ஆ) பங்குகளை 10% முனைமத்தில் வெளியிட்டால்

25. கஜா வரையறு நிறுமம் பங்கு ஒன்றின் மதிப்பு ₹. 10 வீதம் 40,000 நேர்மைப் பங்குகளை பொதுமக்களிடம் வெளியிட்டது. விண்ணப்பத்தின் போது ₹. 2, ஒதுக்கீட்டின் போது ₹. 5 மற்றும் முதல் மற்றும் இறுதி அழைப்பின் போது ₹. 3 என தொகை செலுத்தப்பட வேண்டும். 50,000 பங்குகளுக்கு விண்ணப்பங்கள் பெறப்பட்டன. 40,000 பங்குகளுக்கு விகித அளவு அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டன. கூடுதலாக உள்ள விண்ணப்பத் தொகை ஒதுக்கீட்டிற்கு பயன்படுத்தப்பட்டது. அனைத்து தொகையும் முறையாகப் பெறப்பட்டன எனக் கொண்டு, குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்





26. சாம் நிறுமத்தின் பின்வரும் விவரங்களிலிருந்து பொது அளவு வருமான அறிக்கையை தயார் செய்யவும்

| விவரம் | 2015 - 16 | 2016 - 17 |
|---|---|---|
| | (₹) | (₹) |
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 5,00,000 | 7,00,000 |
| இதர வருமானம் | 50,000 | 70,000 |
| செலவுகள் | 2,50,000 | 3,50,000 |
| வருமான வரி | 30% | 30% |

27. பின்வரும் தகவல்களிலிருந்து கலா நிறுமத்தின் போக்கு சதவீதங்களைக் கணக்கிடுக.

| விவரம் | ₹. ஆயிரங்களில் | | |
|---|---|---|---|
| | 2015 - 2016 | 2016 - 2017 | 2017 - 2018 |
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 400 | 480 | 600 |
| இதர வருமானம் | 100 | 170 | 300 |
| செலவுகள் | 300 | 270 | 450 |

28. யாஸ்மின் மற்றும் சக்தி நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து பொது அளவு நிதிநிலை அறிக்கையினைத் தயார் செய்யவும்

| விவரம் | யாஸ்மின் நிறுமம் | சக்தி நிறுமம் |
|---|---|---|
| | தொகை ₹. | தொகை ₹. |
| 1) பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள் | | |
| 1. பங்குதாரர் நிதி | | |
| அ) பங்கு முதல் | 2,00,000 | 3,00,000 |
| ஆ) காப்பும் மிகுதியும் | 50,000 | 60,000 |
| 2. நீண்டகாலப் பொறுப்புகள் | | |
| நீண்டகாலக் கடன்கள் | 1,50,000 | 1,80,000 |
| 3. நடப்பு பொறுப்புகள் | | |
| கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள் | 1,00,000 | 60,000 |
| **மொத்தம்** | **5,00,000** | **6,00,000** |
| 2) சொத்துகள் | | |
| 1. நீண்டகால சொத்துகள் | | |
| அ) நிலைச் சொத்துகள் | 2,00,000 | 3,00,000 |
| ஆ) நீண்டகால முதலீடுகள் | 50,000 | 1,20,000 |
| 2. நடப்புச் சொத்துகள் | | |
| அ) சரக்கிருப்பு | 2,00,000 | 90,000 |
| ஆ) ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்கு சமமானவைகள் | 50,000 | 90,000 |
| **மொத்தம்** | **5,00,000** | **6,00,000** |



www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## முன் மாதிரி இரண்டாம் இடைப் பருவத் தேர்வு - 2023

# 12 - ஆம் வகுப்பு கணக்குப்பதிவியல் - விடைக் குறிப்பு

| சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுதல். 10 X 1 = 10 | | |
|---|---|---|
| 1 | ஈ | காப்பு முதல் |
| 2 | அ | பத்திர முனைமக் கணக்கு |
| 3 | இ | ₹. 1,50,000 |
| 4 | இ | பங்குமுதல் க/கு |
| 5 | இ | பங்கொன்று ₹. 3 |
| 6 | அ | பணம்சாரா தகவல்கள் |
| 7 | ஆ | நடைமுறை முதல் |
| 8 | இ | 35 |
| 9 | ஆ | + 50 % |
| 10 | ஆ | 110 % |

## பகுதி - II

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும் அவற்றில் வினா எண் - க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** 4 × 2 = 8

**11. மிகை ஒப்பம் என்றால் என்ன?**

- ❖ வெளியிடப்பட்ட பங்குகளின் எண்ணிக்கையை விட, விண்ணப்பிக்கப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்தால் அது மிகை ஒப்பம் எனப்படும்.

**12. பத்திர முனைமக் கணக்கு பற்றி சிறுகுறிப்பு வரையவும்.**

- ❖ ஒரு நிறுமம், தனது முகமதிப்பில் உள்ள பங்கின் மதிப்பினை, அதிகரித்து வெளியிடுவது பங்கு முனைமம் ஆகும்.
- ❖ மிகுதியான தொகை முனைமம் என்று அழைக்கப்படுகின்றது

**13. நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வின் கருவிகளை பட்டியலிடவும்.**

1) ஒப்பீட்டு அறிக்கை
2) பொது அளவு அறிக்கை
3) போக்குப் பகுப்பாய்வு
4) நிதி ஓட்டப்பகுப்பாய்வு
5) ரொக்க ஓட்டப் பகுப்பாய்வு

**14. நடைமுறை முதல் என்றால் என்ன?**

- ❖ "நிதி" என்பது நடைமுறை முதலைக் குறிப்பதாகும்.
- ❖ நடைமுறை முதல் என்பது நடப்புப் பொறுப்புகளைவிட அதிகமாக உள்ள நடப்புச் சொத்துகளைக் குறிப்பதாகும்.

B.BALAJI, GHSS , PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613



www.Padasalai.Net

15.

<u>குறிப்பேட்டுப் பதிவுகள்</u>

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| | வங்கி க/கு ( 5,000 x 12 ) ப | | 60,000 | |
| | நேர்மைப் பங்கு விண்ணப்ப க/கு | | | 60,000 |
| | ( விண்ணப்பத் தொகை பெறப்பட்டது ) | | | |
| | நேர்மைப் பங்கு விண்ணப்ப க/கு ப | | 60,000 | |
| | நேர்மைப் பங்கு முதல் க/கு ( 5,000 x 10 ) | | | 50,000 |
| | பத்திர முனைமம் க/கு ( 5,000 x 2 ) | | | 10,000 |
| | ( விண்ணப்பத் தொகை மாற்றப்பட்டது ) | | | |

16.

<u>அருள் வரையறு நிறுமத்தின் 2016 மார்ச் 31 மற்றும் 2017 மாரச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஒப்புநோக்கும் ஆண்டுக்குரிய வருமான அறிக்கை</u>

| விவரம் | 2015 - 2016 ₹. | 2016 - 2017 ₹. | தொகையின் கூடுதல்( + ) அல்லது குறைவு ( - ) ₹. | சதவீதத்தின் கூடுதல்( + ) அல்லது குறைவு ( - ) |
|---|---|---|---|---|
| விற்பனை மூலம் வருவாய் | 50,000 | 60,000 | + 10,000 | + 20 |
| <u>கூட்டுக</u> :இதர வருமானம் | 10,000 | 30,000 | + 20,000 | + 200 |
| மொத்த வருமானங்கள் | 60,000 | 90,000 | + 30,000 | + 50 |
| <u>கழிக்க</u> : செலவுகள் | 40,000 | 50,000 | + 10,000 | + 25 |
| வரிக்கு முன்னர் உள்ள இலாபம் | **20,000** | **40,000** | **+ 20,000** | + 100 |

<u>பகுதி - III</u>

<u>எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 24 - க்கு கட்டாயம் விடையளிக்கவும்.</u> $4 \times 3 = 12$

17. முன்னுரிமைப் பங்குகளுக்கும், நேர்மைப் பங்குகளுக்கும் உள்ள வேறுபாடுகளை கூறவும்.

| வ.எண் | முன்னுரிமைப் பங்குகள் | நேர்மைப் பங்குகள் |
|---|---|---|
| 1 | பிறவகையான பங்குகள் பெற்றிருக்கும் உரிமைகளை விட, சிலவற்றில் முன்னுரிமைப் | முன்னுரிமைப் பங்குகள் அல்லாத பங்குகள் நேர்மைப்பங்குகள் ஆகும் |

| | | |
|---|---|---|
| | பெற்றிருக்கும் பங்குகள், முன்னுரிமைப் பங்குகள் எனப்படுகின்றன. | |
| 2 | நிறுமத்தின் வாழ்நாள் முழுவதும் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் பங்காதாயம், இதில் பெறமுடியும். | இதில், பங்காதாயம் நிலையாக இருப்பதில்லை |
| 3 | நிறும கலைப்பின் போது, பங்குதாரர்களுக்கு முதலை திரும்ப செலுத்த வேண்டும் | நிறும கலைப்பின் போது, முன்னுரிமை பங்குதாரர்களுக்கு, முதலை திரும்ப செலுத்திய பிறகே, நேர்மை பங்குதாரார்களுக்கு செலுத்தப்படும். |

**18. ரொக்கம் தவிர இதர மறுபயனுக்கு பங்கு வெளியீடு என்றால் என்ன?**

- நிறுமம், நிலம் மற்றும் கட்டடம், இயந்திரம் போன்ற நிலைச் சொத்துகளை வாங்கும்போது, பங்குகளை ரொக்கத்திற்கு அல்லாத மறுபயனுக்காக வெளியிடுவதையே, ரொக்கம் தவிர, இதர மறுபயனுக்கு பங்கு வெளியீடு எனப்படுகின்றது.

**19. ரொக்க ஓட்ட பகுப்பாய்வு குறித்து சிறு குறிப்பு வரையவும்.**

- ரொக்க ஓட்ட பகுப்பாய்வு என்பது, ரொக்க ஓட்ட அறிக்கை, தயாரிப்பதைக் குறிக்கும்.
- இது ஒரு குறிப்பிட்ட காலத்தில், உள்வரும் மற்றும் வெளிச் செல்லும் ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்கு சமமானவைகளை வெளிப்படுத்தும்.
- ரொக்கம் என்பது, கைரொக்கம் மற்றும் வங்கியில் உள்ள கேட்பு வைப்புகளை உள்ளடக்கியது.
- ரொக்கத்திற்கு சமமானவைகள் என்பது, குறுகிய காலத்தில் அதிக நட்டமில்லாமல் ரொக்கமாக மாற்றக்கூடிய, குறுகிய கால முதலீடுகளைக் குறிக்கும்.

**20.**

<u>டேனியல் வரையறு நிறுமத்தின் 2016 மார்ச் 31 மற்றும் 2017 மாரச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஒப்புநோக்கும் ஆண்டுக்குரிய ஒப்பீட்டு வருமான அறிக்கை</u>

| விவரம் | 2015 - 2016 | 2016 - 2017 | தொகையின் கூடுதல்( + ) அல்லது குறைவு ( - ) | சதவீதத்தின் கூடுதல்( + ) அல்லது குறைவு ( - ) |
|---|---|---|---|---|
| | ₹. | ₹. | ₹. | |
| விற்பனை மூலம் வருவாய் | 40,000 | 50,000 | + 10,000 | + 25 |
| <u>கழிக்க</u> : இயக்கச் செலவுகள் | 25,000 | 27,500 | + 2,500 | + 10 |
| வரிக்கு முன் இலாபம் | 15,000 | 22,500 | + 7,500 | + 50 |
| <u>கழிக்க</u> : வருமான வரி | 4,500 | 6,750 | + 2,250 | + 50 |
| **வரிக்கு பின்னர் உள்ள இலாபம்** | **10,500** | **15,750** | **+ 5,250** | + 50 |

B.BALAJI, GHSS , PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

21. **குறிப்பேட்டுப் பதிவுகள்**

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| | நேர்மை பங்கு முதல் க/கு ( 1,000 x 10 ) ப | | 10,000 | |
| | நேர்மை பங்கு முதல் மற்றும் இறுதி அழைப்ப க/கு ( 1,000 x 3 ) | | | 3,000 |
| | நேர்மை பங்கு ஒறுப்பிழப்பு க/கு ( 1,000 x 7 ) | | | 7,000 |
| | ( அழைப்பு பணம் செலுத்தாதல் 1,000 பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன ) | | | |

22. **மீனா வரையறு நிறுமத்தின் 2018, மார்ச் 31 ஆம் நாளைய பொது அளவு இருப்புநிலைக்குறிப்பு**

| | விவரம் | தொகை ₹. | மொத்த சொத்துக்களின் சதவீதம் |
|---|---|---|---|
| I. | **பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்** | | |
| | பங்குதாரர் நிதி | 2,00,000 | 50 |
| | நீண்டகாலப் பொறுப்புகள் | 1,60,000 | 40 |
| | நடப்பு பொறுப்புகள் | 40,000 | 10 |
| | **மொத்தம்** | 4,00,000 | 100 |
| II. | **சொத்துகள்** | | |
| | நீண்டகாலச் சொத்துகள் | 3,00,000 | 75 |
| | நடப்புச் சொத்துகள் | 1,00,000 | 25 |
| | **மொத்தம்** | 4,00,000 | 100 |

23. **புராகிரஸ் வரையறு நிறுமத்தின் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்**

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| | வங்கி க/கு ( 50,000 x 2 ) ப | | 1,00,000 | |
| | பங்கு விண்ணப்ப க/கு | | | 1,00,000 |
| | ( விண்ணப்பத்தொகை பெற்றது ) | | | |
| | பங்கு விண்ணப்ப க/கு (50,000 x 2) ப | | 1,00,000 | |
| | பங்கு முதல் க/கு | | | 1,00,000 |
| | ( பங்கு விண்ணப்பத் தொகையை பங்கு முதல் கணக்கிற்கு மாற்றியது ) | | | |



www.Padasalai.Net

| | | | | |
|---|---|---|---|---|
| | பங்கு ஒதுக்கீட்டு க/கு ( 50,000 x 4 ) ப<br>பங்கு முதல் க/கு<br>( ஒதுக்கீட்டுத் தொகை பெற வேண்டியது ) | | 2,00,000 | 2,00,000 |
| | வங்கி க/கு ப<br>பங்கு ஒதுக்கீட்டு க/கு<br>( ஒதுக்கீட்டுத் தொகை பெற்றது ) | | 2,00,000 | 2,00,000 |
| | பங்கு முதல் அழைப்பு க/கு (50,000 x 2) ப<br>பங்கு முதல் க/கு<br>( பங்கு முதல் அழைப்பு தொகை பெற வேண்டியது ) | | 1,00,000 | 1,00,000 |
| | வங்கி க/கு ப<br>பங்கு முதல் அழைப்பு க/கு<br>( பங்கு முதல் அழைப்பு தொகை பெற்றது ) | | 1,00,000 | 1,00,000 |
| | பங்கு இரண்டாவது அழைப்பு க/கு(50,000 x 2) ப<br>பங்கு முதல் க/கு<br>( பங்கு மீதான இரண்டாவது அழைப்பு தொகை பெற வேண்டியது ) | | 1,00,000 | 1,00,000 |
| | வங்கி க/கு ப<br>பங்கு இரண்டாவது அழைப்பு க/கு<br>( பங்கு மீதான இரண்டாவது அழைப்பு தொகை பெற்றது ) | | 1,00,000 | 1,00,000 |

24.

<u>பாரடைஸ் வரையறு நிறுமத்தின் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்</u>

அ) <u>பங்குகளை முகமதிப்பில் வெளியிடும் போது</u>

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| | அறைகலன் க/கு ப<br>சுகுனா நிறுவன க/கு<br>( அறைகலன் வாங்கியது ) | | 4,40,000 | 4,40,000 |
| | சுகுனா நிறுவன க/கு ப<br>பங்குமுதல் க/கு<br>( பங்கொன்று ₹. 10 வீதம் 44,000 முற்றிலும் செலுத்தப்பட்ட பங்குகளை வெளியிட்டது ) | | 4,40,000 | 4,40,000 |



www.Padasalai.Net

ஆ) பங்குகளை 10 % முனைமத்தில் வெளியிடும் போது

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| | அறைகலன் க/கு ப<br>சுகுனா நிறுவன க/கு<br>( அறைகலன் வாங்கியது ) | | 4,40,000 | 4,40,000 |
| | சுகுனா நிறுவன க/கு ப<br>பங்குமுதல் க/கு (40,000 x 10 )<br>பத்திர முனைமம் க/கு (40,000 x 1 )<br>( பங்கொன்று ₹. 10 வீதம் 40,000 பங்குகள் 10% முனைமத்தில் வெளியிட்டது ) | | 4,40,000 | 4,00,000<br>40,000 |

வெளியிடப்பட வேண்டிய பங்குகளின் எண்ணிக்கையைக் கணக்கிடல்

மொத்த தொகை = ₹. 4,40,000

பங்குகளின் முகமதிப்பு = ₹. 10

முனைமம் = 10 % ஆகையால், முனைமத் தொகை 10 x 10 % = ₹. 1

வெளியீட்டு விலை = முகமதிப்பு + முனைமம் = ₹. 10 + ₹. 1 = ₹. 11

வெளியிடப்பட வேண்டிய நேர்மைப் பங்குகளின் எண்ணிக்கை $= \frac{\text{மொத்த தொகை}}{\text{வெளியீட்டு விலை}} = \frac{4,40,000}{11}$ = ₹. 40,000

25.

கஜா வரையறு நிறுமத்தின் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| | வங்கி க/கு (50,000 x 2 ) ப<br>நேர்மைப் பங்கு விண்ணப்ப க/கு<br>( விண்ணப்பத்தொகை பெற்றது ) | | 1,00,000 | 1,00,000 |
| | நேர்மைப் பங்கு விண்ணப்ப க/கு ( 40,000 x 2 ) ப<br>நேர்மைப் பங்கு முதல் க/கு<br>( பங்கு விண்ணப்பத் தொகையை பங்கு முதல் கணக்கிற்கு மாற்றியது ) | | 80,000 | 80,000 |
| | நேர்மைப் பங்கு விண்ணப்ப க/கு ( 10,000 x 2 ) ப<br>நேர்மைப் பங்கு ஒதுக்கீட்டு க/கு<br>( மிகுதியாகப் பெற்ற பங்கு விண்ணப்பத் தொகை ஒதுக்கீட்டிற்கு பயன்படுத்தப்பட்டது ) | | 20,000 | 20,000 |



www.Padasalai.Net

| | | | | |
|---|---|---|---|---|
| | நேர்மைப் பங்கு ஒதுக்கீட்டு க/கு ( 40,000 x 5) ப<br>நேர்மைப் பங்கு முதல் க/கு<br>( பங்கு ஒதுக்கீட்டுத் தொகை பெற வேண்டியது ) | | 2,00,000 | 2,00,000 |
| | வங்கி க/கு (2,00,000 - 20,000 ) ப<br>நேர்மைப் பங்கு ஒதுக்கீட்டு க/கு<br>( ஒதுக்கீட்டுத் தொகை பெற்றது ) | | 1,80,000 | 1,80,000 |
| | நேர்மைப் பங்கு முதல் மற்றும் இறுதி அழைப்பு க/கு (40,000 x 3) ப<br>நேர்மைப் பங்கு முதல் க/கு<br>( பங்கு முதல் மற்றும் இறுதி அழைப்பு தொகை பெற வேண்டியது ) | | 1,20,000 | 1,20,000 |
| | வங்கி க/கு ப<br>நேர்மைப் பங்கு முதல் மற்றும் இறுதி அழைப்பு க/கு<br>( பங்கு முதல் மற்றும் இறுதி அழைப்பு தொகை பெற்றது ) | | 1,20,000 | 1,20,000 |

26.

**சாம் வரையறு நிறுமத்தின் 2017 மார்ச் 31 மற்றும் 2018 மார்ச் 31 ஆம் ஆண்டுக்குரிய பொது அளவு வருவாய் அறிக்கை**

| விவரம் | 2015 - 2016 | | 2016 - 2017 | |
|---|---|---|---|---|
| | தொகை ₹. | விற்பனை மூலம் பெற்ற வருவாயின் சதவீதம் | தொகை ₹. | விற்பனை மூலம் பெற்ற வருவாயின் சதவீதம் |
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 5,00,000 | 100 | 7,00,000 | 100 |
| கூட்டுக : இதர வருமானம் | 50,000 | 10 | 70,000 | 10 |
| மொத்த வருவாய் | 5,50,000 | 110 | 7,70,000 | 110 |
| கழிக்க : செலவுகள் | 2,50,000 | 50 | 3,50,000 | 50 |
| வரிக்கு முன்னர் உள்ள இலாபம் / நட்டம் | 3,00,000 | 60 | 4,20,000 | 60 |
| கழிக்க : வருமான வரி (30%) | 90,000 | 18 | 1,26,000 | 18 |
| **வரிக்கு பின்னர் உள்ள இலாபம்** | 2,10,000 | 42 | 2,94,000 | 42 |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

27. **கலா வரையறு நிறுமத்தின் போக்கு பகுப்பாய்வு**

| விவரம் | ₹. ஆயிரங்களில் | | | போக்கு சதவீதங்கள் | | |
|---|---|---|---|---|---|---|
| | 2015 - 2016 | 2016 - 2017 | 2017 - 2018 | 2015 - 2016 | 2016 - 2017 | 2017 - 2018 |
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 400 | 480 | 600 | 100 | 120 | 150 |
| கூட்டுக : இதர வருமானம் | 100 | 170 | 300 | 100 | 170 | 300 |
| மொத்தம் | 500 | 650 | 900 | 100 | 130 | 180 |
| கழிக்க : செலவுகள் | 300 | 270 | 450 | 100 | 90 | 150 |
| வரிக்குப் பின்னர் உள்ள இலாபம் | 200 | 380 | 450 | 100 | 190 | 225 |

28.

**யாஸ்மின் மற்றும் சக்தி வரையறு நிறுமத்தின் பொது அளவு இருப்பு நிலைக்குறிப்பு**

| | விவரம் | யாஸ்மின் நிறுமம் | | சக்தி நிறுமம் | |
|---|---|---|---|---|---|
| | | தொகை ₹. | மொத்த சொத்துகளில் சதவீதம் | தொகை ₹. | மொத்த சொத்துகளில் சதவீதம் |
| I. | **பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்** | | | | |
| | 1. **பங்குதாரர் நிதி** | | | | |
| | அ) பங்கு முதல் | 2,00,000 | 40 | 3,00,000 | 50 |
| | ஆ) காப்பும் மிகுதியும் | 50,000 | 10 | 60,000 | 10 |
| | 2. **நீண்டகாலப் பொறுப்புகள்** | | | | |
| | நீண்டகாலக் கடன்கள் | 1,50,000 | 30 | 1,80,000 | 30 |
| | 3. **நடப்பு பொறுப்புகள்** | | | | |
| | கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள் | 1,00,000 | 20 | 60,000 | 10 |
| | மொத்தம் | 5,00,000 | 100 | 6,00,000 | 100 |
| II. | **சொத்துகள்** | | | | |
| | 1. **நீண்டகால சொத்துகள்** | | | | |
| | அ) நிலைச் சொத்துகள் | 2,00,000 | 40 | 3,00,000 | 50 |
| | ஆ) நீண்டகால முதலீடுகள் | 50,000 | 10 | 1,20,000 | 20 |


www.Padasalai.Net

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 2. <u>நடப்புச் சொத்துகள்</u><br>அ) சரக்கிருப்பு<br>ஆ) ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்கு சமமானவைகள் | 2,00,000<br>50,000 | 40<br>10 | 90,000<br>90,000 | 15<br>15 |
| | **மொத்தம்** | **5,00,000** | **100** | **6,00,000** | **100** |

www.Padasalai.Net